*2017 ஆவணி மாத சங்க குடும்ப தின நற்செய்தி*

# ''உம்முடைய பரிசுத்தமான திருவுளத்தை எமக்கு வெளிப்பாடாக்கியருளும்''

## (1) ம் பகுதி

புபுது பாடல் இல 131 முழு உள்ளத்தில்.....

01. (1) இவ்வருடம் பரிசுத்த ஆவியின் பெருவிழாவின் தலையங்க உரையினூடாக, இறைவனின் விருப்பம் பற்றி வெகுவாக வெளியிடப்பட்டன. இவ் வெளிப்பாடுகள் ஊடாக இறைவனின் விருப்பத்தைத் தேடுவதற்கும் அதற்கமைய இந்த வருடம் பூராகவும் வாழ்வதற்கும் இறைவனின் வழிகாட்டல் மற்றும் வல்லமை என்பன எமக்குக் கிடைக்கும் என்பது திண்ணம்.

(ii) புனித மத்தேயு 6: 9-10 வாசிக்கவும்
இது இறை இயேசு எமக்குக் கற்பித்த செபத்தின் ஆரம்பப் பகுதியாகும். இச் செபத்தை உச்சரிக்கும் போது இயேசுவும் இச் செபத்தை ஓதியிருப்பார் என்று தோன்றுகிறது. அதுபோல ''உமது விருப்பம் நிறைவேறட்டும்'' என்று செபிக்கும் போது ''உமது பரிசுத்தமான திருவுளத்தை எனக்கு வெளிப்படுத்தியருளும்'' என்று நிதமும் செபித்திருப்பார்.

02. (1) எம் ஒவ்வொருவரைப் பற்றியும் இறைவனது பரிசுத்த திருவுளம் மற்றும் திட்டம் என்பது நாளாந்தம் நடைபெறும் நிகழ்வுகள் வழியாக வெளியாக்கப்படுகின்றது. பரிசுத்த ஆவியின் ஒளியினுள் நிகழ்வுகளுக்கு ஆழமாக விழிப்புறும் போது அது நமக்கு விளங்கும்.

(ii) நம் அனைவரும் நமது எதிர்காலத்தைப் பற்றிய திட்டங்கள் உண்டு. அதேபோல தமது பிள்ளைகள் பற்றியும் திட்டங்கள் உண்டு. பலர் இந்தத் திட்டங்களை அமுல் படுத்துவதற்கு மிகவும் தெண்டிப்பார்கள். பணத்தை செலவிடுவார்கள். இவை மகா உன்னதமான திட்டங்கள் என எண்ணுவார்கள். அதற்காக செபிப்பார்கள்.
இத் திட்டங்கள் நிறைவேறாத போது துக்கப்படுவார்கள். மனம் தளர்வார்கள்.

(iii) இறைவனுக்கும் நம் ஒவ்வொருவரையும் பற்றியும் நமது பிள்ளைகளைப் பற்றியும் திட்டம் உண்டு. இறைவனைத் தவிர நம்மைப் பற்றி திட்டம் இடுவதற்கு யாராலும் முடியாது. அவரது திட்டம் ஈடிணையற்றது. அந்தத் திட்டத்தை விட உயர்ந்த திட்டத்தை வகுக்க யாராலும் முடியாது. இவ் இறை திட்டம் அல்லது இறை விருப்பத்திற்கு செவிமடுப்பது நாம் நமக்கும் நமது பிள்ளைகளுக்கும் செய்யும் பாரிய நன்மையாகும்.

(iv) எனவே எமது வாழ்க்கையில் அனைத்து நிகழ்வுகளிலும் அதாவது பிரச்சினை ஏற்படும் போது பொருளாதார குறைபாடுகள் ஏற்படும் போது பிள்ளைகளின் பிரச்சினைகள் ஏற்படும் போது நோய் நொடிகள் வரும்போது மற்றும் துன்பகரமான நிகழ்வுகள் வரும்போது ‘‘உமது விருப்பம் நிறைவேறட்டும்’’ என்று நமக்கு கூற முடியுமா? அந்த எல்லாவித நிகழ்வுகளின் போதும் கடவுன் எம்மோடு என்பதை விசுவசிக்க இயலுமா? இப்படியான விசுவாசத்தோடு இறை விருப்பத்திற்கு செவிமடுக்க முடியுமாகுவது பரிசுத்த ஆவியானவருக்கு எக்கணமும் விழிப்புறும் ஒருவருக்கு மட்டுமே, அப்படிப்பட்ட ஒருவருக்கே இறைவிருப்பத்திற்கு ‘ஆமென்’ என்று கூற முடியும்.

03. 2021 ஆம் வருடம் புபுதுவ ஆரம்பித்து 50 வருட பொன் விழாவை கொண்டாடிட ஆயத்தமாகிறது. போன் விழா என்பது இறை வார்த்தையின் படி வரப்பிரசாதமான கணமாகும். மீண்டும் மனம் திரும்பும் கணமாகும். ஆகவே அந்த 4 வருடங்களும் மனம் வருந்துதலின் காலமாக எமக்கு தரப்பட்டுள்ளது. இக்காலம் மனித மட்டத்தில் விழா கொண்டாடும் காலம் அல்ல. எமது உள்ளாந்திரத்திலேயே திரும்புவதற்கு இறைவன் அளித்த காலமாகும். சுவர்கத்திற்கு உள்ளாகும் முதலாவது திறவுகோல் மனம் வருந்துதலாகும்.

மனம் வருந்தும் ஒவ்வொரு கணமும் இறைவன் எம்மை புனிதத்தன்மைக்கு எடுத்துச் செல்கின்றார். என்னைப் புனிதம் அடையச் செய்யும் ஒவ்வொரு கணமும் என்னை நோக்கி விண்ணக வல்லமை வழிந்து வருகின்றது. வல்லமையில் (மட்டத்தில்) செய்ய முடியாததை இறைவன் என்னுள் செய்வதற்கு தொடங்குகிறார். இயேசு ஆண்டவர் தனது பிரசித்தமான வாழ்வை ஆரம்பிக்கும் போது கூறிய வார்த்தைதான் ‘‘மனம் வருந்துங்கள் இறையரசு நெருங்கிவிட்டது’’ என்பதாகும்.

## (2) வது பகுதி - புனித யோசேப்வாஸ் அடிகளர் பணி

இவ்வருடம் பரிசுத்த ஆவியின் திருவிழாவின் போது இவ்வருடத்தை புனித யோசேப்வாஸ் அடிகளாரின் வருடமாக பிரகடனப் படுத்தியது. திருச்சபையும் யோசேப்வாஸ் அடிகளாருக்கு இவ்வருடத்தை அர்ப்பணித்துள்ளது. பரிசுத்த ஆவியானவர் நமக்கு யோசேப்வாஸ் அடிகளாரின் பணி பற்றிய வெளிப்பாட்டை தந்ததும் அதற்காகவிருக்கலாம்.

புனித யோசேப்வாஸ் அடிகளாரின் பணி என்பது அவரது செபத்தினூடாக வெளிப்பாடாகிய இறை விருப்பத்தினுள் திட்டமிடப்பட்ட செயல்பாடாகும். அவருடைய வாழ்க்கையில் நமக்கு புதுமையான இலட்சணங்கள் சிலவற்றை காணலாம். கிறிஸ்துவின் நற்செய்தியை எடுத்துச் செல்லும் அனைவருக்கும் இந்த

இலட்சணங்கள் இருப்பது அவசியம். புனித யோசேப்வாஸ் அடிகளாரை புனிதத் தன்மைக்கு உயர்த்தும் போது திருச்சபைத் தாயானவர் அவரது விசேடமான இலட்சணங்கள் சிலவற்றை மேலெடுத்துக் காட்டியது.

**01. அவரது எளிமையான வாழ்க்கை முறை :-**

எழிமையாக வாழ்வதற்கு பாரியதொரு சிரமத்தை அவர் மேற்கொண்டதன் நோக்கம் இயேசு ஆண்டவரது வாழ்க்கை முறையும் ஏழையாக சீவிப்பது என்று நினைத்தபடியினாலாகும். எனவே அவர் ஏழ்மையான வாழ்வு வாழ்வதற்கு உறுதியான முடிவு எடுத்தார்.

எழிமையான வாழ்க்கை முறை என்பது புபுது மக்களுக்கு புதியதொன்றல்ல. புபுதுவின் ஆரம்பகர்த்தாவாகிய சுவாமி அப்பா அவர்கள் வழியாக கடவுள் இதை எமக்கு வெளிப்பாடாக்கியுள்ளார். சுவாமி அப்பா எழிமையான வாழ்க்கை பற்றி எமக்குக் கூறியது மட்டுமன்றி தனது வாழ்க்கை முறையை வாழ்ந்து காட்டியுள்ளார். அவர் வாழ்வது சிறு ஓலைக் குடிசையிலாகும். சுவர்கள் களிமண்ணால் கட்டப்பட்டுள்ளது. நிலத்திற்கு சாணம் பூசி மெரு கூட்டியுள்ளது. ஆரம்பகர்த்தா ஊடாக கடவுள் அவரது திருவுளத்தை எமக்கு வெளிபாடாக்கியுள்ளார்.

**02. புனித யோசேப்சாஸ் அடிகளாரின் ஏழைகளுக்காக விரயமாகுதல் :-**

புனித யோசேப்வாஸ் அடிகளார் ஏழைகளுக்காக தன்னை விரயமாக்கினார். வாழ்ந்தது ஏழைகளோடு. அவர் சகவாசம் செய்தது சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களோடு. அவரது வாழ்க்கை முறை அவர்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர் ஏழைகளின் நண்பரானார்.

கிது தன புபுது மக்களாகிய எமக்கு இது புதிதல்ல. 1989ம் ஆண்டின் பரிசுத்த ஆவியின் ரெலியின் தலையங்கம் ‘‘ஏழைகளின் சபையாகுவோம்’’ என்பதாகும். அன்று எமக்குக் கிடைத்த வெளிப்பாடு ஏழை எளியவரைத் தேடிச் செல்லதுல் மட்டுமன்றி பாவிகளை சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்களைத் தேடிச் சென்று அவர்களோடு உறவாடுவதற்கேயாகும். அப்படியாக அவர்களோடு உறவாடி அவர்களை கடவுள் பால் அண்மிப்பதற்காகவேயாகும். ஏழைகளை, ஒதுக்கப்பட்டவர்களை தேடிச் செல்லும் பணி எமக்கு கஷ்டமான காரியமல்ல.

**03. திவ்விய பாதுகாப்பு பற்றி புனித யோசேப்வாஸ் அடிகளாருக்கிருந்த விசுவாசம்**

இறைபாதுகாப்பைப் பற்றி புதுமையானதொரு நம்பிக்கை அவருக்கு இருந்தது. தனது வாழ்வுக்காக வேண்டியதை ஆகாயத்தில் பறந்து செல்லும் பறவைகளுக்கு உணவளிக்கும் இறைவன் மேல் பூரணமான நம்பிக்கை இருந்தது. வடக்கிலிருந்து கிழக்கிற்கும் மலை நாட்டிற்கும் வெறுங்காலோடு

காட்டுப் பிரதேசங்களினூடாக கால் நடையாகவும் பயணித்தது மனித மட்டத்திலான ஏதுமொரு பாதுகாப்பையும் இல்லாமலாகும். தான் இரவைக் கழிப்பது எங்கே? உண்ணுவது என்னவென்றோ அணிவது என்னவென்பதையோ அவர் பிரச்சினையாக எடுத்துக்கொள்ளவில்லை.

### 04. யோசேப்வாஸ் அடிகளார் எப்போதும் மற்றவர்களுக்கு ஒரு சவாலாகினார்.

யோசேப்வாஸ் அடிகளார் மற்றவர்களுக்கு தனது வாழ்க்கை முறையினாலேயே சவாலாகினார். தனது வாழ்க்கை முறையை கிறிஸ்துவின் உள்ளத்திற்கமைய மாற்றிக்கொண்டு மற்றயவர்களுக்கு முன் மாதிரிகையானார். தனது ஏழ்மையான வாழ்கை பெலவீனர்களுக்கு காட்டிய அன்பு, கருணை, மற்றும் தமது உயிரையே பணயம் வைத்து நோயாளிகளைப் பராமரித்த விதம் மற்றயவர்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர் மற்றையவர்களுக்கு சவாலாகினார். பௌத்தர்கள் கூட அவரைப் பார்த்து கத்தோலிக்க மதத்தை தழுவிக் கொள்வதற்கு முற்பட்டார்கள்.

புனித யோசேப்வாஸ் அடிகளார் நமக்கும் சவாலாவார், முன் மாதிரிகையாவர். முழு இலங்கையிலும் சேவை செய்வதற்கு ஒரு குருவானவரே இருந்தார். நம்மைப் பார்த்து இன்று எத்தனைப் பேர் கத்தோலிக்க மதத்தை தழுவியிருப்பர் என்பதை எண்ணுவது பொருந்தும். நமது வாழ்க்கை முறையை பார்த்து எத்தனைபேர் புபுது வாழ்வுக்கு உள்ளாகி இருப்பார்கள்? எண்ணிப் பார்க்கவும்.

### 05.கலந்துரையாடலுக்காக

i. கடந்த காலத்தில் தொடங்கிய சமாரியப் பணி உங்களது சங்கத்தில் எவ்வளவு தூரம் செயல்பட்டுள்ளது?

ii. கடந்த தூய ஆவியின் பெருவிழாவிற்கு புதியவர்கள் எத்தனை பேரை நீங்கள் தனிப்பட்ட விதத்தில் கூட்டிச் சென்றீர்கள்?

iii. சமாரியப் பணியைப் பற்றி கிடைத்த வெளிப்பாட்டை நீங்கள் அனுசரித்தது எவ்வாறு?

iv. தடைகளை முறியடிப்பதற்கு நீங்கள் எடுத்த உபாயங்கள் எவை?

v. ஒல்லந்தருடைய துன்புறுத்தல் மத்தியில் தன்னைக் கொலை செய்வதற்கு இராணுவத்தினர் தேடும் வேளையிலும் உபாயமார்க்கத்தோடு தனது தூதுப் பணியை தொடர்ந்து நடத்தியது எப்படி என்பதை கலந்துரையாடவும்.

உங்களது தவறுகளுக்காக குழுவில் மனம் வருந்துதலுக்கு உள்ளாகுங்கள். சமாரியப் பணிக்கு நடந்தது யோசேப் வாஸ் அடிகளாரின் பணிக்கும் நடவாதவாறு பார்த்துக் கொள்ளவும்.

06. புபுது தற்போது யோசேப்வாஸ் தூதுப் பணி ஆரம்பித்துள்ளது. இறை பாதுகாப்பில் நம்பிக்கை வைத்து இறையரசுக்காக நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பணிசெய்வதற்கு உங்களது வாழ்க்கையை முழுமையாக அர்ப்பணிப்பதற்கு விருப்பமா? இறைவன் உங்களை ஸ்பரிசித்தால் இறை பாதுகாப்போடு முழுமையாக தங்கி வாழ்வதற்கு முடியுமானால் முன் வரவும். இது வாழ்வதற்கு ஒரு தொழில் அல்ல. பணம் - உறைவிடம் உணவுகளுக்காக விரைவோமேயானால் இது உங்களுக்கு சரிவராது.

நமது நாட்டின் கிழக்கின் 1%விகிதமாவது கத்தோலிக்கர் இல்லாத பிரதேசங்கள் உண்டு, கண்டி – காலி – மட்டக்களப்பு – மன்னார் - பதுளை போன்ற தூரப்பிரதேசங்களில் இறையரசைக் கட்டியெழுப்ப நீங்கள் விருப்பமா? நீங்கள் சவலாவதற்கு விருப்பமா? நீங்கள் பிரசங்கிப்பதன் படி வாழ வேண்டும்.

புனித யோசேப்வாஸ் அடிகளார் சிறையிருக்கும் போதும் அவரது வாழ்க்கை மற்றைய சிறைவாசிகளுக்கும் அரசனுக்கும் சவாலாகியது. அவர் ஒரு புனிதர் என்றும் அரசன் அறிந்து கொண்டதால் கோடை காலத்தில் மழைக்காக வேண்டுமாறு அரசன் இவருக்கு வேண்டுகோல் விடுத்தான். கடவுளின் மகிமைக்காக அவர் செய்த வேண்டுதலால் மழை கிடைத்தது.

புனித யோசேப்வாஸ் அடிகளார் பலவிதமான துன்பப்பட்டு கொலை அச்சுருத்தல் மத்தியில் சவால்களை முறியடித்து உபாயமார்க்கங்களோடு இறையரசுக்காக விரயமானார்.

07. நீங்களும் இறையரசுக்காக விரயமாவதற்கு விருப்பமா? இறைபாதுகாவல் பற்றிதங்கி வாழ்வதற்கு விருப்பமா?

கீழ் கண்ட தூது சேவைகளுக்காக உங்களுக்கு விருப்பமாக இருந்தால் முன் வரவும்.

i. குடும்பத்தோடு முழு நேர பணியில் ஈடுபடுவது
ii. தூரப்பிரதேசங்களில் உள்ள இடங்களுக்கு சென்று அப்பிரதேசங்களைப் பார்த்தல்
iii. தூரப்பிரதேசங்களில் ஒரு புகழ்ச்சி கிராமத்தைப் பார்த்தல்.

யோசேப்வாஸ் பணிக்காக எம்மை அபிஷேகம் செய்யுமாறு எம் ஒவ்வொருவருக்காக செபிப்போம்.

புபுது பாடல் 113